இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கேதுரு மற்றும் ஆலிவ் மரங்களால் அடையாளப்படுத்தப்பட்ட லெபனோனின் மீள்தன்மையை பாராட்டுகிறேன். மேலும் தற்போதைய மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் எனது ஆசீரை வழங்குகின்றேன்.

# தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நில உரிமை வழங்கும் அசாம்



தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்கள்

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் தேயிலைத் தோட்டங்களில் தலைமுறைகளாக வசித்து வரும் தொழிலாளர்கள் சட்டபூர்வமான நில உரிமையைப் பெறுவதற்கு உறுதியளிக்கும் புதிய சட்ட திருத்தத்தை அங்குள்ள கிறிஸ்தவத் தலைவர்கள் வரவேற்றுள்ளனர் என்று யூக்கான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2025-ஆம் ஆண்டு, நவம்பர் 28-ஆம் தேதியன்று, நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தத் தொழிலாளர்களில் பலர் கிறிஸ்தவர்கள் அடங்குவர் என்றும், இச்சட்டம் அங்குள்ள தொழிலாளர் குடியிருப்புகள் அமைந்துள்ள இடங்களை ஏறத்தாழ 330,000 தொழிலாளர் குடும்பங்களுக்குக் குடியிருப்பிற்காக ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கிறது என்றும் அச்செய்தி நிறுவனம் உரைத்துள்ளது.

இந்நிலையில், அசாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா இந்தச் சட்டத்தை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை என்று பாராட்டியுள்ளதாகவும், மேலும் இது தொழிலாளர்களுக்கு நீண்ட கால வீட்டுக் குடியிருப்புப் பாதுகாப்பை வழங்கும் என்று குறிப்பிட்டதாகவும் கூறியுள்ளது அச்செய்தி நிறுவனம்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நில உரிமையை வழங்கும் அசாம் அரசின் முடிவை அம்மாநில கிறிஸ்தவ அமைப்பு வரவேற்றாலும், நிலத்தை அரசிற்கு மாற்றும் அதன் நடவடிக்கைக்கு தனியார் தோட்ட உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டார்களா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது அச்செய்தி நிறுவனம்.

அம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 126 சட்டமன்றத் தொகுதிகளில் 35 இடங்களில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் செல்வாக்கை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுள்ள காரணத்தால், அடுத்த ஆண்டு அங்கு வரவிருக்கும் தேர்தலைக் கருத்தில் கொண்டு அரசியல் உள்நோக்கத்துடன் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று கிறிஸ்தவத் தலைவர்கள் அச்சம்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது அச்செய்திக் குறிப்பு. (UCAN)

ஜான்சிராணி அருளாந்து - வத்திக்கான்

# ஒன்றிணைந்து பணியாற்ற கற்றுக்கொள்வோம்



உரை வழங்கும் திருத்தந்தை (ANSA)

**டிசம்பர் 2, செவ்வாய்க்கிழமையன்று, லெபனோன் நாட்டின் தலைநகர் பெய்ரூத்ரூ ரஃபிக் ஹரிரி பன்னாட்டு விமான நிலையத்தில் இடம்பெற்ற வழியனுப்பு விழாவில் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வழங்கிய அருளுரை.**

அன்புள்ள சகோதரர் சகோதரிகளே!

லெபனோனின் வலுவான சந்திப்பு மற்றும் சமூக உணர்வை அனுபவித்த பிறகு, அதை விட்டு வெளியேறுவதில் உள்ள சிரமத்தை நான் உணர்கிறேன். எனது இந்தத் திருத்தூதுப் பயணத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். என்னை சிறப்பாக கவனித்துக் கொண்ட உங்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளும் பாராட்டுகளும். மேலும் லெபனோன் மக்கள் அனைவரையும் என் இதயத்தில் சுமந்து செல்கிறேன்.

இங்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொள்ள விரும்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நோக்கத்தை இந்நேரத்தில் நினைவுகூர்கிறேன். மேலும் கன்னி மரியா மீதான பக்தி மற்றும் புனித சார்பலின் சாட்சிய வாழ்வு உட்பட லெபனானின் பகிரப்பட்ட ஆன்மிக பாரம்பரியத்தை மதிப்பதில் பெருமகிழ்வடைகிறேன். லெபனோன் நாட்டின் ஆழமான ஆன்மீகம், பெய்ருத் துறைமுக குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட துன்ப துயரங்கள் மற்றும் மக்களின் உண்மை மற்றும் நீதிக்கான விருப்பம் ஆகியவற்றை மீண்டும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

கேதுரு மற்றும் ஆலிவ் மரங்களால் அடையாளப்படுத்தப்பட்ட லெபனோனின் மீள்தன்மையை பாராட்டுகிறேன். மேலும் தற்போதைய மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் எனது ஆசீரை வழங்குகின்றேன்.

அமைதிக்கான வலுவான வேண்டுகோளை விடுக்கும் அதேவேளையில், தாக்குதல்களை நிறுத்துமாறு வேண்டுகிறேன். மேலும் பேச்சுவார்த்தை மற்றும் உரையாடல்கள் கட்டமைக்கப்படும்போது ஆயுதங்கள் அழிக்கப்படுகின்றன என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

”லெபனோன் என்பது ஒரு நாடு மட்டுமல்ல; அது ஒரு செய்தி” என்ற திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களின் வார்த்தைகளை நினைவு கூர்கிறேன். இது ஓர் எதார்த்தமாக மாற, ஒன்றிணைந்து பணியாற்ற கற்றுக்கொள்வோம், ஒன்றாக நம்பிக்கை கொள்வோம். லெபனோன், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் அனைத்து அனைத்து மக்களுக்கும் எனது அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்குகின்றேன்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# தித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



இலங்கையில் தித்வா புயல் பாதிப்பு (AFP or licensors)

**இலங்கையில் ஏற்பட்ட தித்வா புயலால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்குத் தேவையான உதவிகளை உடனடியாக வழங்குவதற்காக, உலக நாடுகளின் நிதி உதவியை அதிகரிக்குமாறு யுனிசெப் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.**

டிசம்பர் 3, இப்புதனன்று, இலங்கையைத் தாக்கிய தித்வா என்னும் புயல் அங்குப் பெரும் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள வேளை, இந்தப் புயலால் ஏறக்குறைய 10 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில், 2 லட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் அடங்குவர் என்றும் யுனிசெப் நிறுவனம் அறிக்கையொன்றில் கூறியுள்ளது.

மேலும் இந்தப் புயல் காரணமாக கடுமையான வெள்ளம், நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும், வீடுகள் மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்புகளுக்குப் பரவலான சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் அவ்வறிக்கை, இடம்பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள் நோய், ஊட்டச்சத்துக் குறைபாடு, பாதுகாப்பற்ற சூழல் மற்றும் ஆபத்துகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

2019-ஆம் ஆண்டு முதல் இலங்கையில் வறுமை இரட்டிப்பாகியுள்ள நிலையில், அண்மையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து அந்நாடு மீண்டு வரும்வேளை, இந்தப் பேரழிவு அங்கு மேலும் பெரும் சிரமங்களை உண்டாக்கியுள்ளது என்று கூறும் அதன் அறிக்கை, மேலும் பாதுகாப்பான நீர், உணவு, உளவியல் ஆதரவு மற்றும் அவசர உதவிகளை வழங்குவதற்காக அந்நிறுவனம் அரசுடன் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தப் புயலால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்குத் தேவையான உதவிகளை உடனடியாக வழங்குவதற்காக, உலக நாடுகளின் நிதி உதவியை அதிகரிக்குமாறு யுனிசெப் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

ஜான்சிராணி அருளாந்து - வத்திக்கான்

# கோலாலம்பூர்: மாபெரும் நம்பிக்கைத் திருப்பயணம் (GPH) 2025

ஆசியா முழுவதிலும் இருந்து வந்த நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள், தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி, தங்கள் சமூகங்களுக்குத் தோழர்களாகச் செயல்படப் பணிக்கப்பட்ட நிகழ்வுடன், 2025-ஆம் ஆண்டிற்கான 'மாபெரும் நம்பிக்கை திருப்பயணம்' (Great Pilgrimage of Hope - GPH) நிறைவடைந்தது. இதன் அடையாளமாக அவர்களுக்கு ஒரு சிறிய சிலுவையும், ஆயரின் ஆசீரும் வழங்கப்பட்டன. கடவுளின் நெருக்கத்திற்காக ஏங்கும் உலகிற்கு நம்பிக்கையின் அடையாளங்களாகத் திகழ்வதே தங்கள் பணி என்று அவர்களுக்கு நினைவூட்டப்பட்டது.

நவம்பர் 30 அன்று விடைபெற்ற பிரதிநிதிகள், எம்மாவு நோக்கிய பாதையில் இயேசு கொண்டிருந்த மென்மையான, செவிசாய்க்கும் மனப்பான்மையுடன் ஆசிய மக்களுடன் பயணிக்க அழைப்பு விடுக்கப்பட்டனர். கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பின் 2,000-வது ஆண்டு நிறைவான 2033-ஐ நோக்கி, ஆசியா கடவுளின் அருளை நம்பி முன்னேறுகிறது.

ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பால் (FABC) ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நான்கு நாள் நிகழ்வு, பினாங்கில் உள்ள லைட் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் 32 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்த மாநாடு ஒரு ஆழமான 'ஒன்றிப்புப் பயண' (Synodal) சந்திப்பாக அமைந்தது. அங்கு சமூகங்கள் செபித்து, தேர்ந்து தெளிந்து, ஆசியாவின் கலாச்சாரம் மற்றும் ஆன்மீக மரபுகளை மதித்து நற்செய்தியை அறிவிக்கும் வழிகளைச சிந்தித்தன.

தனது தொடக்க உரையில், கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே, அதிகார வெறிக்கு மாறாக தாழ்ச்சி, திறந்த மனம் மற்றும் நம்பிக்கையை வலியுறுத்தினார். ஆசியத் திருச்சபையை 'ஞானிகளைப்' (Magi) போல இருக்க அவர் அழைத்தார் — அதாவது, செவிமடுத்து கற்றுக்கொள்ளும் தேடுபவர்களாக இருக்க வேண்டும் என்றார். உண்மையான நம்பிக்கை நம்மை இரக்கத்திற்கும், துணிச்சலான அன்பிற்கும் இட்டுச் செல்லும் என்று அவர் பிரதிநிதிகளுக்கு நினைவூட்டினார்.

பயிலரங்குகள், முக்கிய உரைகள் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்கள் ஆசியாவின் பரந்த கத்தோலிக்க அனுபவத்தை எடுத்துரைத்தன — பழமையான சமூகங்கள் முதல் இளம் திருச்சபைகள் வரை, துன்புறுத்தப்படும் குழுக்கள் முதல் பரந்த டிஜிட்டல் நகரங்களில் தனிமையில் வாழும் விசுவாசிகள் வரை இதன் செய்தி தெளிவாக இருந்தது: ஆசியாவில் விசுவாசம் என்பது கதைகள், நினைவுகள் மற்றும் வாழ்ந்த அனுபவங்கள் மூலமே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

FABC தலைவரான கர்தினால் பிலிப் நேரி ஃபெராவோ, 'ஒன்றிப்புப் பயணம்' (Synodality) என்பது இணைந்து பயணிக்கும் ஒரு ஆன்மீக மனநிலை என்று வலியுறுத்தினார். கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவதற்கு முன்பே உரையாடல், தாழ்ச்சி மற்றும் துணிச்சல் தேவை என்று அவர் கூறினார்.

GPH 2025 நிறைவடைந்தபோது, நம்பிக்கை ஒளி வீசியது. இயேசுவின் கதை, ஆசியாவில் அவர் நம்பிக்கையைச் சுமக்கும் வாழ்வுகள் மூலம் புதிதாகச் சொல்லப்படத் தயாராக உள்ளது. புதுப்பிக்கப்பட்ட இதயங்களுடன், பிரதிநிதிகள் வெறும் பங்கேற்பாளர்களாக அல்லாமல், தங்கள் மக்களோடு செவிமடுக்கவும், நடக்கவும், கண்டம் முழுவதும் நம்பிக்கையை ஏற்றவும் அர்ப்பணிக்கப்பட்ட தோழர்களாக வீடு திரும்பினர்.







# மலரும் மண உறவு இயக்கம் ME190

கடந்த நவம்பர் 21-23, 2025 கோலாலம்பூர் APC மையத்தில் மலரும் மண உறவு இயக்கம் ME190 தமிழில் நடைபெற்றது. இதில் 12 தம்பதியர்கள் கலந்துப் பயன்பெற்றனர். தம்பதியர் தங்களின் திருமண வாழ்வை இன்னும் அதிகமாக மேம்படுத்திக் கொள்ள இந்த வார இறுதிப்பயிற்சி நடைபெற்றது. மூன்று நாள் நடைபெற்ற இந்த வார இறுதியில் கலந்து நிறைவு செய்தபின் தம்பதியர் தங்களுடையக் கருத்துகளை இவ்வாறுபகிர்ந்துகொண்டனர்.

இங்கு நாங்கள் பெற்ற அனுபவம், எனக்கே என்னை அறிமுகப்படுத்தியது. நாங்கள் சிறந்த தம்பதியர் என்றுநினைத்திருந்த வேளையில் என்னிடம் மாற்றிக்கொள்ள வேண்டியவையும் இருக்கின்றன என்று உணர்ந்தேன். பொன்னும் பொருளும் துணைக்குச் செலுத்தவேண்டிய அன்புக்கு ஈடாகாது என்பதை அறிந்துகொண்டேன். என் துணையைவிட எனக்கு வேறு எதுவும் பெரிதல்ல என்பதை நாங்கள் இருவரும் உணர்ந்துகொண்டோம். மேலும், வரும் காலத்தில் இதில் கலந்துகொள்ள மற்ற தம்பதியரையும் ஊக்கப்படுத்துவோம் என்று திரு திருமதி ரேய்மண்ட் ரேவதி, ரவாங் – புனித யூதா ததேயு ஆலயத்திலிருந்து பகிர்ந்துகொண்டனர்.

இந்த வார இறுதிப் பயிற்சி எங்களுக்கு மிகவும் வித்தியாசமான அனுபவத்தை தந்தது. வெளி உலகத்தொடர்பைவிட்டுவிட்டு எங்களைப் பற்றி நாங்கள் சிந்திக்கவும், ஒருவருக்கொருவர் நெருக்கமடையவும் எங்கள் திருமணவாழ்வின் பந்தத்தில், அன்பில் இன்னும் ஆழமாக வேரூன்றிக் கொள்ளவும் ஒரு அரிய வாய்ப்பை வழங்கியது. 'எதிர்ப்பாராததை எதிர்பாருங்கள்' என்ற வாக்கியத்தைப் போல நாங்கள் எதிர்ப்பாராதவைகளை நிறையக்கற்றுக்கொண்டோம் என்று திரு திருமதி மார்க் கேரலின், ஸ்தாபாக் – நல்லாயன் பங்கிலிருந்து வந்த தம்பதியர் பகிர்ந்துக்கொண்டனர்.

இந்த வார இறுதியில் எவ்வாறு ஆழ்ந்து செவிமடுப்பது என்றும் எங்கள் எண்ணங்களை, உணர்வுகளோடும், திறந்தமனதோடும் எவ்வாறு பகிர்ந்துகொள்வது என்றும் அறிந்துகொண்டோம். எங்களுக்கிடையிலான புரிதலும், உரையாடலும் மேம்பட்டுள்ளது. நாங்கள் பெற்றுக்கொண்ட திருமண அருளடையாளத்தைத் தம்பதியராகப்பாராட்டவும், நெருக்கமான அன்பில் வளரவும் இது எங்களுக்கு பெரிய அனுபவத்தைத் தந்தது என்று திரு திருமதிடேனியல் பிரசாத் ஜோசப்பின் மேரி – கிள்ளான் புனித லூர்து அன்னை ஆலயத்திலிருந்து வந்திருந்த தம்பதியர. பகிர்ந்துகொண்டனர். மற்ற தம்பதியர்களும் தங்களின் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டனர். ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்த பயிற்சியில் ஒவ்வொரு தம்பதியரும் கலந்து பயன்பெற மலரும் மணஉறவுவார இறுதிப் பயிற்சிக்குழுவினர் உங்களை அன்போடு அழைக்கின்றனர்.

தமிழ் மலரும் மண உறவு வார இறுதிப் பயிற்சி குழுவினர்

# வழியை ஆயத்தம் செய்யுங்கள்

## திருவருகைக் காலத்தின் 3-ஆம் ஞாயிறு (ஆண்டு அ)

**வாசகங்கள்:**
**ஏசாயா 35:1-6, 10 யாக்கோபு 5:7-10**
**நற்செய்தி: மத்தேயு 11:2-11**

முதல் வாசகம் புதுமையையும் நம்பிக்கையையும் உணர்த்துகிறது. அதில் ஒரு எதிர்பார்ப்பு, மகிழ்ச்சியின் சாயல் மற்றும் அற்புதமான ஒன்று நெருங்கி வருகிறது என்ற உணர்வு மேலோங்கியுள்ளது. ஆனால் இந்த மகிழ்ச்சியான சூழலுக்கு அப்பால், இறைவாக்கினர் வரவிருக்கும் ஒருவரைச் சுட்டிக்காட்டுகிறார்: அவரே மெசியா. அவர் பார்வையற்றோரின் கண்களைத் திறப்பார், காது கேளாதோரைக் கேட்கச் செய்வார், கால் ஊனமுற்றோரை வலுப்படுத்துவார், வாய் பேசாதோரைப் பேச வைப்பார். இது லூக்கா 4-இல் இயேசு கூறிய வார்த்தைகளுடன் இணைகிறது; பழங்கால வாக்குறுதிகள் தம்மிடமே நிறைவேறியதாக இயேசு அங்கு அறிவிக்கிறார். நாம் எதிர்பார்த்திருக்கும் அந்த குழந்தை, குறிப்பாக ஏழைகளுக்கும் விளிம்புநிலை மக்களுக்கும் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவருகிறார்.

இன்றைய நற்செய்தி இந்த மையக்கருத்தைத் தொடர்கிறது. இயேசு கொண்டுவரும் மீட்பு உண்மையானது மற்றும் வாழ்வளிப்பது; அது துயரத்தில் நம்மைத் தேற்றுகிறது, நம்பிக்கையில் நம்மை உயர்த்துகிறது. யாக்கோபு எழுதிய இரண்டாம் வாசகம் இதற்கு மற்றொரு பரிமாணத்தைச் சேர்க்கிறது. அவர் பொறுமையை வலியுறுத்துகிரார். பயிர்கள் எப்படிச் சரியான பருவத்தில் மட்டுமே விளையுமோ, அதை எப்படி அவசரப்படுத்த முடியாதோ, அதேபோல நாமும் கடவுளின் செயல்பாட்டிற்காக நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டும். மேலும், குறிப்பாக இந்தப் பரபரப்பான காலத்தில், ஒருவருக்கொருவர் எதிராக முறையிட வேண்டாம் என்றும் அவர் நினைவுபடுத்துகிறார். இது வெறும் நடைமுறை அறிவுரை மட்டுமல்ல — இது கடவுளின் தீர்ப்புக்கு நம் இதயங்களைத் தயாரித்து, இன்னும் ஆழமான ஆயத்த நிலைக்கு நம்மை அழைக்கிறது.

இயேசு தம்மை எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதையும் நற்செய்தி நமக்குக் காட்டுகிறது: அவர் ஓர் இறைவாக்கினராகவும், கடவுளின் பெயரால் செயல்படுபவராகவும் தம்மை உணர்ந்தார். தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு இதுவே அடிப்படையாக இருந்தது — இயேசு தாம் சொன்ன, செய்த அனைத்தின் மூலமாகவும் கடவுள் யார் என்பதை வெளிப்படுத்தினார். பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர், காது கேளாதோர், தொழுநோயாளர்கள் மற்றும் இறந்தோர் மீதும் கடவுள் கொண்டிருந்த பரிவை இயேசுவின் செயல்கள் வெளிப்படுத்தின.

திருவருகைக் காலத்தின் செய்தி தெளிவாக உள்ளது: இயேசுவின் பிறப்பைக் கொண்டாட நாம் தயாரிக்கும் இவ்வேளையில், நம் இதயங்களைக் கடவுளின் இதயத்தைப் போல மாற்ற அழைக்கப்படுகிறோம். செவிமடுக்கப்படாதோர், கவனிக்கப்படாதோர், ஒதுக்கப்பட்டோர் அல்லது சுமைகளால் நசுங்குண்டோருக்கு நம்பிக்கையைக் கொண்டுவர நாம் அழைக்கப்படுகிறோம். திருவருகைக் காலம் மனமாற்றத்திற்கு (Conversion) நம்மை அழைக்கிறது — இதன் மூலம் நாம் நம் சமூகத்திற்கும் உலகிற்கும் கடவுளின் அன்பின் அடையாளங்களாக மாற முடியும்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.